**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03–ஆம் தேதி திங்கள்கிழமை**

**இ.ம.எண்.05/2026 இன் அ.வ.எண்.01/2015**

1. கிருஷ்ணன்
2. சாந்தி

. . . மனுதாரர்கள்/ வாதிகள்

**/எதிர்/**

1) பொன்னுசாமி (இறப்பு)
2) முருகன் (எ) ராஜவேல்
3) வீரப்பகவுண்டர்
4) பழனியப்பன்
5) நல்லுசாமி
6) பெருமாள்
7) கிருஷ்ணன் (இறப்பு)

...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

8) பொன்னம்மாள்
9) சகுந்தலா
10) இந்திரா
11) முருகன்
12) பெருமாள்
13) செல்வராஜ்

...எதிர்மனுதாரர்கள்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள் தரப்பில் இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் படி, மனுவில் கண்டுள்ள விபரப்படி

வழக்குரையில் திருத்தம் செய்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் : 07.07.2026

இறுதி விசாரணை செய்த நாள் : 24.07.2026

உத்தரவு பகரப்பட்ட நாள் : 03.08.2026

மனுதாரர்களுக்காக :திரு.B.மலர்கண்ணன்– வழக்கறிஞர்

2ம் எதிர்மனுதாரருக்காக : திரு.S.மணிகண்டசாமி – வழக்கறிஞர்

1, 7 மற்றும் 3 முதல் 6

எதிர்மனுதாரர்கள் : தோன்றாத்தரப்பினர்கள்.

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் 1ம் மனுதாரர் 2ம் மனுதாரருக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்த நிலையில், அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி 23.03.2025 ம் தேதி 2 முதல் 8 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். ஏற்கனவே 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக 2 முதல் 8 பிரதிவாதிகள் அசல் வழக்கில் தரப்பினர்களாகி உள்ளார்கள். மேற்படி 1ம் பிரதிவாதி பொன்னுசாமியின் வாரிசுகளை சேர்ப்பதற்காக இ.ம.எண்.03/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு 08.04.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கின் 7ம் பிரதிவாதி 11.04.2024ம் தேதி பிச்சையம்மாள், நல்லம்மாள் ஆகியோர்களை திருமணம் செய்து அவர்கள் ஏற்கனவே இறந்துபோக அவர்களில் பிச்சையம்மாள் மூலம் பிறந்தவர்கள் 2ம் வாதி சாந்தி ஆவார். மேற்படி நல்லம்மாள் மூலம் முருகன், பெருமாள் மற்றும்

செல்வராஜ் ஆகியோர் பிறந்துள்ளனர். மேற்படி முருகன், பெருமாள் மற்றும் செல்வராஜ் ஆகியோரை அசல் வழக்கில் இறந்துபோன 7ம் பிரதிவாதி கிருஷ்ணன் என்பவரது வாரிசாக சேர்க்க கோரி இ.ம.எண்.07/2025 மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 08.04.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே அதை பொறுத்து அசல் வழக்கில் திருத்தம் செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) 2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 8ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்றவை மறுக்கப்படுகிறது. பிராதினை திருத்தம் செய்யும்பட்சத்தில் அசல் வழக்கின் தன்மை மாறுபடும். எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

**3)** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4)** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர்கள் அவர்களது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

**5)** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர்கள் அவர்களது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை, மனுதாரர்களின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

6) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**7) தீர்வு :-**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கானது சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலயில் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி மற்றும் 7ம் பிரதிவாதி ஆகியோர் தங்களது வாரிசுகளை விட்டுவிட்டு வெவ்வேறு தேதியில் இறந்துபோக அவர்களது வாரிசுகளை தரப்பினராக சேர்க்க கோரி இம.எண்.03/2025 மற்றும் 07/2025 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி 1 மற்றும் 7ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்து திருத்தம் செய்ய வேண்டியது அவசியமானதாகும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. வழக்கின் தன்மை மற்றும் வழக்குமூலமும் மாறுபடாது. தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டு பூசல்களை முழுமையாக களைவதற்கு மேற்படி திருத்தமானது அவசியமாகும். மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ள

காரணங்கள் நம்பத்தகுந்தவையாக உள்ளது. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

**8) முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.08.03 17:42:21 +0530

**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.08.03 17:42:25 +0530

**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**